## பாடம்:1

## நமக்கு வேதாகமம் எப்படி கிடைத்தது?

நீங்கள் தேவனைப் பற்றி படிக்க விரும்புவதைக் குறித்து மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். வேதாகமத்தைப் பற்றிய இந்த பதினைந்து பாடங்களையும் நீங்கள் படிக்கும் போது தேவனைப் பற்றி நன்கு தெரிந்துகொள்வீர்கள் என நம்புகிறோம். வேதாகமம் தேவனுடைய வசனம் என்பதை ஏற்கனவே விசுவாசிக்கிறவர்களுக்காக இப்பாடம் தயாரிக்கப்பட்டிருப்பதால் அதைக் குறித்து இப்பாடத்தில் நாங்கள் நிரூபிக்க முயற்சி செய்வதில்லை. வருகிற வாரங்களில் தேவனுடைய வசனத்தை தொடர்ந்து படிக்கும்போது அதிகமாக தெரிந்துகொள்வீர்களென நாங்கள் விசுவாசிக்கிறோம்.

## மூல பாஷைகள்

வேதகாகமம் நமக்கு எப்படி கிடைத்தது என்று பலர் அறியாமலிருக்கிறார்கள். என்ன எழுத வேண்டும் என்பதை தேவன் ஆவியானவரைக் கொண்டு மனிதர்களுக்கு கட்டளையிட்டார் என்பதே அதற்குரிய பதில். வேதாகமத்திலுள்ள பழைய ஏற்பாடு எபிரெயம், அரபிக் ஆகிய மொழிகளில் எழுதப்பட்டது. இன்று ஒரு சிலர் மட்டுமே இம்மொழிகளை வாசிக்க முடியும். புதிய ஏற்பாடு, இயேசு பேசிய கிரேக்க மொழிகளில் எழுதப்பட்டது. இன்று மக்கள் பேசும் பல மொழிகளில், அறிஞர்கள் வேதாகமத்தை மொழி பெயர்த்திருக்கின்றனர்.

## முதலில் ஓலைச் சுருள்களில் எழுதப்பட்டது.

வேதத்தின் முதற்பகுதிகள் ஓலைச்சுருள்களில் எழுதப்பட்டன. பழைய ஏற்பாட்டை முழுமையாக பெற்றுக்கொள்ளுவதற்கு பல சுருள்களைப் பெற வேண்டியது அவசியம். உதாரணமாக, ஏசாயா புத்தகம் ஒரு சுருளிலும், தானியேல் புத்தகம் மற்றொரு சுருளிலும் எழுதப்பட்டுள்ளது. இப்படி வேதம் முழுவதும் பல சுருள்களைக் கொண்டிருக்கிறது.

புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் 'பாப்பிரஸ்' என்னும் ஒருவகைப் பேப்பர் பயன்படுத்தப்பட்டு வந்தது. பிற்பாடு மனிதர்கள் வேதத்தைப் பேப்பர்களில் எழுதி புத்தக வடிவில் அமைத்தனர். அப்பொழுதும் கூட ஒரு சிலர் மட்டும் வாசிக்கக்கூடிய மொழியில்தான் வேதாகமம் எழுதப்பட்டு இருந்தது.

## ஆங்கிலத்தில் வேதாகமம்

17-ம் நூற்றாண்டில் இங்கிலாந்தைச் சேர்ந்த யாக்கோபு அரசர் (King James) என்பவர் எல்லோரும் வேதாகமத்தை வாசிக்கும்படி வேதத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க ஏற்பாடு செய்தார். பொதுமக்களுக்கு மொழிபெயர்த்து கொடுக்குபடி தனது அரசவையிலிருந்து ஞானிகளுக்கு கட்டளையிட்டார். இன்றிருக்கும் பல ஆங்கில வேதாகமங்கள் அந்த மொழிபெயர்ப்பின் பிரதிகளே. அம்மொழிப்பெயர்ப்பில் உள்ள ஒரு சில வார்த்தைகள் இப்பொழுது பொருள் மாறி இருப்பதால் ஒரு சில நவீன மொழிபெயர்புகள் தோன்ற ஆரம்பித்தன. இன்று ''King James'' மொழிபெயர்ப்பே அதிகமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இரண்டாவது பாடத்தில் நாம் வேதத்திலுள்ளவைகளை படிப்போம். இப்படி படிப்பதை நீங்கள் விருப்புவீர்கள் என நம்புகிறோம். தயவுசெய்து கேள்விகளுக்குப் பதில் எழுதி பதில்தாளை தனியே எடுத்து, உடனே எங்களுக்கு தபாலில் அனுப்பி வையுங்கள். நீங்கள் அனுப்புகிற ஒவ்வொரு பாடத்திலும் உங்கள் பெயதையும். விலாசத்தையும் குறிப்பிடுங்கள். தவறாமல் சரியான தபால்தலை ஒட்டவும்.

அறிமுகம் கடிதம் படித்து. விண்ணப்பப் படிவம் நிரப்பிவிட்டதா? ஆம்/இல்லை